**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I, UDUMALPET

| | | | |
|---|---|---|---|
| Calender | : | CC | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | Case No | of 20 |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : | Prosecution | |
| | : | Defence Court | |
| Name | : | | |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with he provision of act X of 1873

of the 22th day of August 2019

**நாள் 22.08.19 STC No.5/2019 மசா1 சசிக்குமார்.**

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு மு.வி)**

நான் இந்த புகாரில் புகார்தாரர் ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன். பிரமாண வாக்கமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை அதில் உள்ள கையொழுத்து என்னுடையது தான். எதிரி எனது பெயருக்கு கரூர் வைஸ்ய வங்கி காசோலை உடுமலை பேட்டை கிளை காசோலை எண்.000111 , 28.9.2018 ம் தேதியிட்டு ரூபாய் 15,00,000/-க்கு எனது மருத்துவமனையில் வைத்து வழங்கினார் அவர் வழங்கிய அசல் காசோலையை தாக்கல் செய்கிறேன். அது மதசாஆ 1 ஆகும். கடந்த 9.10.2018 தேதியில் மேற்படி காசோலையை ICICI வங்கி உடுமலை பேட்டை கிளையில் வசூலுக்காக தாக்கல்செய்தேன். மேற்படி 16.10.2018 ம் தேதி காசோலை எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. அந்த Return memo மதசாஆ 2 ஆகும். மேற்படி விவரம் குறித்து 24.10.2018 ம் தேதி வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பின் அலுவலக நகல் மதசாஆ 3 ஆகும். மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்க்கான அஞ்சலக ஒப்புகை அட்டை மதசாஆ 4 ஆகும். எதிரி மேற்படி அறிவிப்பிற்கு 3.11.2018 ம் தேதியிட்ட அனுப்பிய பதில் அறிவிப்பை தாக்கல் செய்கிேற்ன. அது மதசாஆ 5 ஆகும். எதிரி காசோலை தொகையை திருப்பி செலுத்தாமல் காசோலை வழங்கி மோசடி செய்யததால் இந்த புகாரை தாக்கல் செய்திருக்கிறேன். புகார் படி தீர்ப்பாகவேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**கு.வி. ஒத்திவைக்கப்படுகிறது.**